**தமிழ்நாடு அரசு**
**நீர்வளத்துறை**

கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர், நீவது, நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி அவர்களின் செயல்முறை

பிறப்பிப்பவர்: பொறி.ஆ.ஜெயசண்முகம்,எம்,இ.,எம்.சி.ஏ.,
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர்,நீவது,

**செயல்முறை ஆணை எண். இ1/1191/2024, நாள்.03.05.2024.**

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV -ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1) முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), நீவது, சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்3(3)/35336/2023, நாள் 22.09.2023.
2) தலைமைப் பொறியாளர், நீவது, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். இ1/4191/2023-4, நாள் 03.10.2023.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இ1 /1191/2023, நாள் 04.10.2023.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV -ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்யப்பட்டு பார்வை 1-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), நீவது, சேப்பாக்கம், சென்னை-05, அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2 மற்றும் 3-ல் காணும் தலைமைப் பொறியாளர், நீவது, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-05 மற்றும் இவ்வலுவலச் செயல்முறை ஆணைகளின் மூலம் திரு. B.பாலகார்த்திகேயன். 04.10.2023 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

Scanned with OKEN Scanner

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 28-ன்படி மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் 32 (a) (i) -ன் படியும், இந்த நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடனும் திரு. B.பாலகார்த்திகேயன், இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 04.10.2023 முற்பகல் முதல் அவரது பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட திரு. B.பாலகார்த்திகேயன், இளநிலை உதவியாளர் அப்பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. மேலும் தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/-பொறி.ஆ.ஜெயசண்முகம், நாள்.03.05.2024,
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர்,நீவது.,
நீ.நீ.ஆ.க., பூண்டி.

<u>பெறுநர்</u>
திரு. B. பாலகார்த்திகேயன், இளநிலை உதவியாளர்,
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர் அலுவலகம்,
நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம்,
பூண்டி - 602 023.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர்,நீவது., சார்பில்,
நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம்,
பூண்டி -602 023.